# இந்துசாதனம்

விரோதி வருஷம (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ce. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூக] யாழ்ப்பாணம்:- நந்தன ஹூ பங்குனீ௴ ௭ உ வெள்ளிக்கிழமை (20 March. 1953) [இல - கரு]


## தேவர்க்குந் தேவனாய் நின்றாய் ... .... ....!

திருச்சிற்றம்பலம்.

போற்றி
வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்
ஊனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி தேவர்க்குந்தேவனாய்நின்றாய்
[போற்றி
கானத்தீயாடலுகந்தாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

# வேண்டுவார் வேண்டுவது யாது?

## அஃதே ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி

அவ்வைச் சிவனடியார்

வரைவது

அப்பர் சுவாமிகள் பாடியருளிய வேண்டுவார் வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் என்னும் அடியின் பொருளைச் சிறிது நோக்குவார். இத்தொடரிலுள்ள வரலாற்றை ஓர் உதாரணமாக எடுத்தோமாயால் இந்த இடத்தில் மாத்திரந்தான் அப்பொருள் பயக்குமென்று நேயர்கள் தப்பபிப்பிராயங் கொள்ளாதிருக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். இயல்பாகவே பாசங்களினீங்கி முற்றறிவுடைய தலைவராகிய சிவபெருமான் ஒருவருக்கேயன்றி அநாதியே மலமத்திற் சிக்கிச் சிற்றறிவுடையவர்களாகிய எம்போன்றார்க்கு எது வேண்டுவது; எது வேண்டப்படாதது என்று நிச்சயிக்கும் அறிவு இருக்க முடியுமா? அன்றியும் எம பிறவியின் நோக்கம எது என்பதைத்தானும் அறிய முடியாத நிலையில் இருக்குமாம் எதற்கு வேண்டியதைக் கேட்பது? எது தன் இலக்கு என்பதையே அறிந்துகொள்ள முடியாத மனதுக்கு அவ்விலக்கை யடைவதற்கேற்ற வழி கண்டுபிடித்தல் முடிவதான காரியமா? இன்னும் இலக்கை ஒருவாறு அறிந்து கொண்ட விடத்தும அதனைப் பெறும மார்க்கத்தை அறிதலும் வேண்டுதலும் அதனினும் வருத்தமான காரியமே. அவன் அருளாலே அவன் தாள் வணங்கவேண்டிய நிலையிலுள்ளவர்களாகிய நாம் அதற்கு வழிகளை நாடவும் அநுகூல பிரதிகூலங்களின் காரணங்களை ஆராய்ந்து அதனபடி ஒழுகவும அருகதையுடையோமாவோமா? அன்றியும அதிகாரமுடையோமாவோமா?

உலக அநுபவத்தில் எங்கள் முன்னிலையில் பலரும் பலபலவகையில்பலபல நோக்கத்துடன் வணக்கஞ் செய்கின்றனர் என்பதைக் காணலாம். அவர்களுடைய வேண்டுகோள்களும் அவர்களுடைய அறிவுக்குத் தக்கபடியே இருக்கும். ஆனால் எல்லோருடைய நோக்கமும தாம் துன்பத்தின் நீங்கி இன்பம் பெறுதல் என்பதில் சிறிதும் ஐயப்பாடின்று. துன்பத்தின் நீங்கி இன்புறுதற்கு வழியெது என்று அறியாதவர்களாய் தங்கள் சிற்றறிவுக்கெட்டிய அளவில் இன்பத்துக்குக் காரணமானவற்றை வேண்டி வணக்கஞ் செலுத்துகின்றனர். தங்கள் வேண்டுகோளின் பிரதிபலன் எதுவாய் முடியும் என்றாவது, தங்கள் வேண்டுகோள் பிறர் துன்பத்துக்குக் காரணமாகக் கூடுமோ என்பதைப்பற்றியாவது அவர்கள் ஒரு சிறிதும் சிந்திப்பதில்லை. ஆனால் இவ்வாறான வேண்டுகோள்கள் எல்லாவற்றிற்கும் தலைவர் அருள்செய்தார் என்றாவது: சிறிதும் அருள் செய்யவில்லை என்றாவது சொல்ல முடியாது. தலைவராகிய சிவபெருமான் ஆன்மாக்களிடத்து வைத்த பேரருள் காரணமாகப் பொழியும் அருள் எவ்விடத்தும ஒப்ப நிகழ்வதன்றி ஓரோவிடத்துக் கோடும தன்மையுடைதன்று. ஆகவே ஒருவர் வேண்டியதைப் பெற்றும, இன்னொருவர் வேண்டியதைப் பெறாதும, இன்னும் ஒருவர் ஒருபொழுது வேண்டியதைப் பெற்றும், இன்னொருபொழுது வேண்டியதைப் பெறாதும் போவதற்குக காரணம அவரவரிடத்துக் காணப்படும அறியாமையேயன்றித் தலைவராகிய சிவபெருமான் கண்ணதன்று. தான் அறியாமையின் நீங்கிப் பேரின்பத்தை அடைதற்கு வேண்டியது எது என்று அறியமாட்டாத ஆன்மா தன் இச்சைப்படி வேண்டிக்கொள்ளுகின்றது. அவ்வாறு வேண்டிக்கொள்ளுகின்ற ஆன்மாவுக்கு, அந்த ஆன்மாவின் பக்குவத்திற்குத்தக்கதாக கொடுக்கப்பட்டால், அவ்வான்மா அறியாமையின் நீங்கிப் பேரின்பமடைய வழி பிறக்குமோ அது அப் பரம்பொருளால் கொடுக்கப்படுகிறது. அது அவ்வான்மாவால் விரும்பப் பட்டதாய் இருக்கவும் கூடும். வெறுக்கப்பட்டதாய் இருக்கவும் கூடும். ஆனால் அது அறியாமையினீங்கிப் பேரின்பமடைவதற்கு வேண்டிய தொன்றே என்பதுதான் உண்மை. மேலும் சூரபன்மன் அகில உலகும் தன் குடைக்கீழமையத் தான் அழியப்பெறாது தேவர்களுக்கு இம்சை செய்வதையே வேண்டினான். தேவர்களுடைய வினைப்பயனை நுகரச் செய்யுந் துணையும் அவ்வாறு அருளப்பட்டது. அப்பால் ஆணவமலமும் தன் வலிகுன்றிற்று. தேவரும் துயர் நீங்கப்பெற்றனர். தலைவராகிய சிவபெருமானைப் பார்வதிதேவியாருடன் சேர்க்குமாறு தூண்டப்பட்ட மன்மதனுக்கு அது முடிந்ததில்லை. ஆனால் அவனுடைய ஆணையா சக்கரம் திரிலோகங்களிலும் சரிவர நடப்ப அத்தியாவசியம் வேண்டப்படுகின்ற அநங்கனும் பேறு அவனுக்கு அருளப்பட்டது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# இன்பந்தரும் பொருள் எது?

## தாம் ஈட்டியதே தமக்கின்பந் தரும்!

தென்னாபிரிக்கா, டர்பன்

திரு. ச. மு. பிள்ளை அவர்கள்

ஒருவன் தன் முயற்சியால் ஈட்டிய பொருளைப் பலர் எளிதிற் பெற்று வீண்வழியிற் செலவழிக்கின்றனர். இங்ஙனம் பிறர் பொருளைப்பெற்று வாழ்வோர் அப்பொருளைப் பயனற்ற வகையிற் செலவிடுதற்குக் காரணம், அவர்கள் தம் முயற்சியால் அப்பொருளை ஈட்டாது அது வந்த அருமையறியாத் தன்மையேயாம். ஒருவன் தன் முயற்சியாற் பொருள் ஈட்டுவானுயின், தான் செய்யும் ஒவ்வொரு செலவும் இன்றியமையாததா? என்று ஆராய்ந்து செலவு செய்வான், ஒவ்வொரு காசின் அருமையும் அவனுக்குத் தெரியும் ஒவ்வொரு காசைப் பெறுவதற்குத் தான் அடைந்த ஒவ்வொரு துன்பமும் மெய்வருத்தமும் அவன் மனக்கண்முன் தோன்றும். அவ்வாறின்றிப் பிறர் பொருளைச் செலவழிப்பதனால்தான் இவர்கள் வீண்வழியிற் பொருள்களைச் செலவிடுகின்றனர். தன்னலத்துக்காக ஒருவன் தேடிய பொருளைப் பிறனொருவன் தனக்குரிமையாக்கிக் கொள்வானாயின் தனக்கென்று மாம் சேர்த்து வைத்துள்ள உணவைத் தான் உண்டு வரும் புல்லுருவியை அவன் ஒப்பான்.

ஆனால் நேயர்களுக்கு ஒரு ஐயப்பாடு நிகழலாம். "முன்னோர் ஈட்டிவைத்த பொருளை என்னதான் செய்வது?" என்று, அத்தகைய பொருளைத் தனக்கென்று பயன்படுத்தாது, ஏழை எளியவர்களுக்கும், பொது நிலையங்களுக்கும், அறமன்றங்களுக்கும், மக்கள் ஆக்க நெறிக்கும பயன்படுத்தி அம்முன்னோர் பெயரை — புகழை இவ்வுலகத்தில் நிலைநாட்ட வேண்டும், இங்ஙனம் அப்பொருளைப் பயன்படுத்தாது, தன்னலத்துக்கே பயன்படுத்தித் தம் உழைப்பு—முயற்சி சிறிதுமின்றி உண்டு உறங்கும் மனிதர்கள் — மிகவும் இரங்கத்தக்கவர்கள்.

"ஒவ்வொருவனும் பிறர் பொருள் நோக்காது தன் முயற்சியாற் பொருள் தேடி வாழ்க்கைசெலுத்த வேண்டும்," என்னுங் கருத்துக் கொண்டே,

"பூமி திருத்தி யுண்."

"திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு,"

"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது."

—ஔவையார்.

"உழவர்க் கழகில் குழுதூண் விரும்டல்."

'முதலுள பண்டங் கொண்டு வணிகஞ் செய்து அதன் பயனுண்ணு வணிகரும் பதரே"

"வித்துமேரும் உளவாயிருப்ப எய்த்தங்கிருக்கும் ஏழையும் பதரே."

(நறுந்தொகை —

—அதிவீரராமபாண்டியன்)

என்று நம் நீதி நூலாரும் கூறிப் போந்தனர்.

இனி ஒரு ஏழை நாளெல்லாம் உழைத்துத் தன் முயற்சியாற் தேடிய சிறு தொகையைக்கொண்டு வருகின்றான். அதைக்கொண்டு உணவுப் பொருள்களை வாங்கிச் சமைத்துத் தன மனைவியும் மக்களும் உடனிருக்கத்தானும் ஒருங்கிருந்து—அச்சமின்றி —பிறர்க்குத் தீங்கு விளைக்கும் எண்ணமின்றி — அதனால் வரும் இடையூறின்றி— இன்பமாய் — மன மகிழ்ச்சியாய் உணவு கொள்ளுகின்றான். ஆ! அந்த ஏழையின் மகிழ்ச்சிதான் என்னே!

திருவள்ளுவனார், 'தலைவியைச் சேர்ந்த தலைவன், அத்தலைவியிடத்துத் தான்பெறற இன்பம் மிகச் சிறந்ததாக இருக்கின்றது' என்றியம்புதைக் கூறவந்தவிடத்து,

"தம்மிலிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"

(திருக்குறள், காமத்துபால்
புணர்ச்சி மகிழ்தல் - ௭)

என்று கூறுகின்றார்.

ஒரு தலைவன் தலைவியொடு நுகரும் இன்பத்துக்குத் தன் முயற்சியால் வந்த பொருளைத் தன் வீட்டிலிருந்து பகுத்துண்ணுதலை உவமையாகக் கூறினரென்றால், தன் முயற்சி காரணமாக வரும பொருளால் ஒருவன் பெறும மகிழ்ச்சி - இன்பம சொல்லுந் தகையதோ? அங்ஙனம் வந்த பொருளாற் பெறும் இன்பம், பெண்ணின் முயக்கத்தினாற் பெறும் இன்பத்திலுங்கூடச் சிறந்ததென்று சொல்லவேண்டுமா? என் உவமேயத்தினும் உவமானம் சிறந்ததல்லவா! பரிமேலழகரும் நம் கருத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

ஆசிரியத் தலையங்கம்

# உள்ளூர்ச் சங்கத் தேர்விலும் கட்சி ஊக்கமா?

## பொதுசன சேவையா? தனி நலத் தாகமா?

இப்பொழுது சில நாட்களாகக் கிராமச்சங்கத் தேர்தலுக்காகவேண்டிய ஆரவாரங்கள் நடைபெறுகின்றன. பாராளுமன்றத் தெரிவு மழை விட்டும் கட்சித் தூமி விட்டபாடில்லை!

பெரிய தெரிவிற் கட்சிப் போராட்டம் இருக்கவேண்டியது இயல்பே. தேர்தல் முடிந்து கட்சிகளும் களைப்பாறுகின்றார்கள். ஆனால் கட்சியைச் சேர்ந்தவர்களும் சார்ந்தவர்களும் உள்ளூர்த் தெரிவிலும் பிரிவினையை யுண்டுபண்ணி வேடிக்கை பார்க்க முயன்று வருகின்றனர்.

கிராமச்சங்கமோ, பட்டின சங்கமோ நகர சங்கமோ, மாநகர சங்கமோ இவையெல்லாம் கட்சி பேதத் துக்கப்பாற்பட்டன. கொள்கை நிறுவும் சங்கங்களல்ல. [illegible] வேண்டிய வசதிகளை உண்டு பண்ணுவதே இவற்றின் கடமைகள். இவ்வாறிருக்கக் கட்சி முறைப்படி கங்கணம் கட்டுவதேனோ?

கிராம வேலைகள் செய்யப்படா திருப்பதற்குக் கட்சிப் பாகுபாடே காரணமென்றறியக்கிடக்கின்றது. இச் சங்கங்களில் மட்டுமன்று கிராம முன்னேற்றச் சங்கம், சமூக நிலையம் முதலானவற்றிலும் கட்சிப் பிரிவினை வேரூன்றக் கூடிக்கொண்டே வருகிறது. ஈற்றில் பொது மக்கள் ஒரு சமூகங் காணாது வறுமைக்கும் பிணிக்கும அடிமைகளாவதை இந்த உள்ளூர்ச்சங்க அங்கத்தவர்கள் அறியார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன வருஷ பங்குனி மீ
௭ உ வெள்ளிக்கிழமை

## பொருளுக்காகப் போதித்தல் முறையா?

சொற்பொழிவென்றால் இந்நாட்களில் முன்னரிலும் பன்மடங்கு விரும்பப்படும் ஒரு போதனை முறை. பள்ளிக்கூடங்கள் முதற் பல்கலைக்கழகங்கள் ஈறாக, சமூக முன்னேற்றச் சங்கம் தொடக்கம் சகல பணியாளர் சபைகள் வரைக்கும், உள்ளூர்க் கூட்டம் ஆதியாக உலகமாநாடுகள் உள்ளாக எங்கும் சொற்பெருக்க வேண்டும். அதற்குச் சொல்லாளரும் வேண்டும். அவ்வளவில் நின்றுவிடவில்லை. மதபோதனைகள் என்ற வகையில் ஆலயங்களிலோ, கலாசாலைகளிலோ, மடங்களிலோ, மதமாநாடுகளிலோ சொற்பொழிவாற்ற வேண்டும். ஆற்றுநரும் வேண்டும். இந்த நிலைமையிலே இந்நாட்டுக்குமட்டுமே எண்ணிறந்த சொற்பொழிவாளர் வேண்டும். அவ்வாறு பொருள் உழைக்கும் ஆற்றலை படைத்தோர் எண்தொகை ஒரு சிறிதேயென்று சொல்லலாம்.

தொன்றுதொட்டுக்கல்வி பயிற்றுநரும் சொற்பெருக்குவோரும் அப்பணிகளில் தங்கடன் என்றே ஈடுபட்டு வந்தனர். கற்பிப்போன் கற்பிக்கப்படுவோன் என்ற முறையில் அவர்கள் குருவும் சீடனுமாக இருந்தமையாற் பொருள் நயங் கருதப்படவில்லை. பின்னாளில் கல்வி பயிற்றுதலும் ஏனைய தொழில்கள் போலானமையாற் படி பெற்று அறிவு ஊட்டும் கடமை ஏற்பட்டது போலும். இது எவ்வாறாயினும் மதபோதனைகளையும் கல்வி பயிற்றுவோர் முறையிற் பொன்னுக்கும் பொருளுக்குமாக ஆலயங்களிலாயினென் அறநிலையங்களிலாயினென் மத போதகர்கள் படிபெற்றுப் பரன் பணி நடத்தும் மனப்பான்மையுடையவர்களாகின்றனர் என்று தோற்றுகின்றது.

நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று நாயன்மார்கள் இறை பணி செய்து வந்த பரம்பரையில் இன்றும் அடியார்கள் இருப்பார்களேயானல் ஆலயங்கள் தோறும் அறநிலையங்கள் தோறும் அழையாவிருந்தினராய் அன்புடன் சென்று தாம் பெற்ற அறிவுப் பெருக்கத்தாலாகின்ற அருவியூற்றில் மக்கள் ஆடி அகப்புனிதம் அடையும் அருந்தொண்டு ஆற்றமாட்டார்களா? இசையொடுகூடிய சொற்பொழிவென்னும் கதாப்பிரசங்கங்கள் என்றாற் கோயில்களில் மேள வாத்தியம நடனம் முதலியனவற்றிற்குப் படி கொடுத்து இயற்றுவிப்பதுபோலாகின்றன. எனவே, உண்மையிலே சமய வழிபாட்டில் நின்று இறைநெறி உணர்ந்து இயைந்த வாழ்க்கை நடத்துவிப்பதில் மக்கட்கு உதவி புரிதலே மததொண்டாயிருந்தால் அது பொருவில்லாது ஆற்றப்பெறும். இன்றேல் அது பொருந்தாததாகின்றது.

எனவே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், கொழும்பு விவேகானந்த சபையார், திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையார், பதுளை கண்டி குருநாக்கல் சைவமகாசபையார் இவை போன்ற ஏனைய சபையார், மதபோதகர்கள் ஆங்காங்கு சென்று சமயப் பிரசாரஞ் செய்விக்கும் ஒழுங்குகளை உண்டுபண்ணுவதோடு படிக்காசுக்காகப்போதனை செய்யும் வகையினர் சைவத்தில் இடம் பெறார் என்ற உண்மை வெளிவரச் சொற்பெருக்காற்றும் அறிஞர்களின் ஆதரவைப் பெற்று அவர்கள் அவகாசத்துக்குத் தக்கவாறு பல வேறிடங்களிலும் மதப் பிரசங்கங்களுக்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

தொடர் கதை

### மனித உருவந் தரும்

# மாண்புடை மருந்து

### நீரரமகளின் நினைவை நிறைவேற்றுமா?

## ★ நீரர மங்கையர் ★

— 11 —

அஞ்சீரரமகள் அவற்றைக் கண்டதும் பயந்து போனாள். கிட்ட நெருங்க அவளுக்குக் கொஞ்சமேனும் துணிவு வரவில்லை. நெஞ்சு படபட வென்று அடித்தது. அங்கு நில்லாது ஓடச்சொல்லி அவள் உள்ளம ஏவியது. ஆனால் அங்கிலையில் அரசிளங் குமாரனைப்பற்றிய எண்ணமும் அழிவில்லா உயிரைப்பற்றிய நினைவும் அவள் உள்ளத்தில் உதித்தன. அவை அவளை அவ்வண்ணம் ஓடாது தடுத்ததுமன்றி அவற்றைக் கடப்பதற்கு வேண்டிய ஓர்மத்தையும் அளித்தன. அரைமா தன்னைப் பிடியாத வண்ணம் கூந்தலை ஒரு குடுமியாய் இறுக்கி முடிந்து கொண்டாள். பின்னர் தன் கைகளை ஒன்றையொன்று குறுக்காக வைத்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டு மீன்போல நீருக்குள் விரைவாய் நீந்திச் சென்றாள். அரைமாவின் வளைந்த விரல்களையுடைய பெரிய கைகள் அவளைப் பிடிக்க முயலவும் அகப்படாது அவைக்கூடாகக் கெதியாய் நழுவி ஓடினள். அவற்றின் கை ஒவ்வொன்றிலும் நூற்றுக் கணக்கான விரல். அவ் விரல்களின் பிடி இரும்புச் சங்கிலியிலும் வலியது. கடலிலே மரக்கலம் உடைந்து மாண்டவரின் வெள்ளெலும்புக் கூடுகளும், மரக்கலத்தின் சுக்கான் துண்டுகளும், பெட்டிகளும், நிலவுலகத்திலுள்ள மிருகங்களின் பிணங்களும், இன்னும் பல பொருட்களும் அவற்றின் கைக்குள் இருந்தன அதுவுமன்றி ஓர் இடத்தில் இளம் பருவமுள்ள நீரரமகள் ஒருத்தியைப் பிடித்து நெரித்து வைத்திருந்தன. யாவற்றிலும இக்காட்சியே அவளுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்தது.

கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

அவ் அரைமா ஒன்றிலும் பிடிபடாமல் இவ்வண்ணம் விரைந்து அவள்சென்று, பின் ஒரு வெளியை அடைந்தாள். அங்கே பல பெரிய கடற் பாம்புகள் உறுமிக் கொண்டும், தமது பயங்கரமான செங்கல் மங்கல் நிறமுள்ள வயிற்றைக் காட்டிக் கொண்டும படமெடுத்தாடிக் கொண்டுமிருந்தன அவ்வெளி நடுவில் கடலுள் மூழ்கி இறந்த மனிதரின் எலும்புகளினாற் கட்டிய வீடு ஒன்று இருந்தது. அதுவே சூனியக்காரியின் வீடு. சில வேளைகளில் தனது வாயிலிருந்து உணவைக் கொத்தித்தின்ன நாகணவாய்ப் புள்ளை மனிதர் விளையாட்டாக எப்படி விட்டுக்கொண்டிருப்பாரோ அப்படியே சூனியக்காரியும் தனது வாயிலிருந்து உணவை மெல்ல மெல்ல எடுத்தெடுத்துத்தின்ன, தேரை பலவற்றை விட்டுக்கொண்டிருந்தனள். அங்குள்ள பயங்கரமான கொழுகொழுத்த பாம்புகளை "குஞ்சுகாள்! இங்கே உங்கள் அம்மாவிடம் ஓடி வாருங்கள்" என்று அன்புடன் அழைத்து அவற்றைத் தனது மார்பிலேற்றி அவை ஆங்கு மண்டலமிட்டிருக்க வைத்துக் கொண்டு படுத்திருந்தாள்.

அச்சிறுமி அங்குபோயதும் சூனியக்காரி தனதுபடுக்கையிலிருந்தவாறே அவளுக்குப் பின்வருமாறு உரைத்தாள்; "சிறுமியே! நீ எதை விரும்பி இங்கு வந்தாய் என்று எனக்குத் தெரியும். உன் விருப்பம் மிகவும் மடமையானது. என்றாலும் நீ விரும்பியதைச் செய்ய யான் ஆயத்தம். அழகிய அரச குமாரியே உன் எண்ணம் உனக்குத் தீமையே பயக்கும். நிலவுலகத்திலிருக்கும் அரசிளங் குமாரனை அடைய வேண்டும், அழிவில்லா உயிரைப் பெறவேண்டும். உனது மீனவால் மனிதருக்கிருக்கும் இரண்டு முட்டுக்கட்டையாய் மாறவேண்டும் என்று விரும்புகிறாயல்லவா"? இவ்வண்ணம் கூறிக் கெக்கட்டமிட்டு ஒரு பயங்கரமான சிரிப்புச் சிரித்தாள் அச்சிரிப்பின் ஒலியைக் கேட்டு அஞ்சி அவள் மார்பிற் படுத்திருந்த தேரைகளும் பாம்புகளும் ஒன்றன்மேலொன்றாகப் புரண்டுருண்டு தொம்மெனக் கீழ்விழுந்தன.

அவள் மேலும் தொடர்ந்து கூறியதாவது: நல்லவேளை நீ இன்று வந்தது. ஏனெனில் நாளைக்காலை பொழுது காலித்ததின்பின் ஓராண்டு முடியும் வரைக்கும் என்றால் உனக்கு ஒரு உதவியும் செய்ய முடியாது. இப்போது யான் உனக்கு ஒரு குடிநீர் காய்ச்சித் தருவேன். கிழக்கு வெளிக்குமுன் நீ அதனை நிலவுலகத்திற்குக் கொண்டு சென்று கடற்கரையில் இருந்த வண்ணம் குடிக்கவேண்டும். அப்போது உன் மீன்வால் மனிதர் அழகென மதிக்கும் இரண்டு காலாக மாறும். உன்னை இரு கூறாக வாளால வெட்டும்போது எவ்விதமான

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## தமிழர்களே வருநிலையை உணர்ந்து பாரீர்!

### இன மழிந்து பண் பழிந்து பாழாகுமென்ப தோரீர்!!

### மண்மீது தமிழ்செழித்து ஓங்கச்செய்வீர்!!!

[ கலாநிதி க. கணபதிப்பிள்ளை ஆக்கியது ]

ஆரியர்தம் ஆடலுக்குத் தாளம்போட்டே
அண்டிநிற்கும் தமிழர்தமக் கவவுமுண்டோ?
பூரியராம் இக்கூட்டம் மொழியை விற்றும்
போந்தபெருந் தம்மினத்தை வலிபவிற்றும்
கூரியதம் வஞ்சனையாற் சுயநலத்தாற்
குலவியரைப் பொழுதாக்கம் கருதிநிற்பார்
பாரிலிவர் இனமழிந்து பண்பழிந்து
பாழாகு மென்பதையோ சிறிதுமோரார்...!

இத்தகைய இடமெமக்கும் எம்மரிய
இன்றமிழாம் மொழிதனக்கும் எதிரே நிற்க
மத்தர்களாய்ப் படுத்துறங்கும் தமிழர்களே!
வருநிலையை யுணர்ந்து பாரீர்!!
ஒத்தநல்ல கலைபெருக்கி யுலகுக்கீந்தே
உயர்வளங்கள் தந்துநின்ற எமது முன்னோர்
வித்தகமாய் எமக்களித்த செல்வம்போனால்?
வீண்நிலத்தல் யாம்வாழ்தல் ஓர்ந்துகாண்மின்.

என்னரிய தமிழர்களே! உந்தமக்கு
யான்புகலும் புன்மொழியைச் சிறிதுகேண்மோ!
பன்னுதமிழ் சாற்றிடுவோர் யாரென்றாலும்?
பானமையுறும் முடன்பிறந்தா ரென்றேயுள்ளீர்!
துன்னுதமிழ் நூல்பலவும் யாத்து மண்மேற்
தூயதமிழ் வளங்கொழிக்கச் செய்வீரெங்கும்
மன்னுதமிழ் எங்கள்தமிழ் பான்மைசான்ற
மண்மீது செழித்துநின்றே ஓங்கச்செய்வீர்!

## திருக்கேதீச்சரத்தில் சைவப் பிரசங்கம்

### ஞானசிவாசாரியார் அவர்களின் அறிவுரைகள்

திருக்கேதீச்சரத்தில் 13-3-52ல் சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களுள் தலைசிறந்த நூலான சிவஞான சித்தியாரின் வணக்கச் செய்யுளாகிய "ஒரு கோட்டன் இரு செவியன்" "அறுவகைச் சமயத்தோர்க்கும்" என்னும் செய்யுட்களை வணக்கமாகப் பாடி ஒரு அரிய சொற்பொழிவை ஆரம்பித்தனர்.

அத்தருணம் அங்கே செய்ய வேண்டிய திருப்பணிகளைப்பற்றிச் சுட்டிக்காட்டி இவ்வம்பலைக் கைதூக்கித் தங்களால் இயன்ற பொருளுதவி புரிந்து இத் திருப்பணியை நிறைவேற்றி வையுங்கள் என்று உருக்க மனதோடு கேட்போர் கண்ணீர் ததும்ப நாவலரையாவையும் குறிப்பிட்டுப் பேசினர். இப் புண்ணியத்தைச் செய்வது அனந்த கோடி புண்ணியம. இதற்கு ஊரவர்களின் அன்பு இருக்கவேண்டும். அவ்வித அன்பை இவ்வூரவர்கள் வளர்க்க நாடோறும விபூதி பூசிவரல் வேண்டும. விபூதி தரிக்கும் நேரமெல்லாம் அம்பலைத் தோத்திரம் பண்ணல் வேண்டும். என்று நல்லுரை கூறினர்.

இத்திருப்பணிச்சபையானது ஒரு மகஸ்த்தாபனம். இதனை நாம் வளர்க்க வேண்டும், இச்சபையார் சமயத்தை வளர்க்க வேண்டும், சைவ நூல்களை வெளியிடல் வேண்டும, மணிவாசகப்பெருமான் அரசனிடம் அறவளி நிறை பொருளையே வாங்கித் திருப்பணி செய்தார். சபையாரும அறவளிப் பொருளாலே திருப்பணி செய்ய வேண்டும். சபையார் சைவ போதனை செய்துவர வேண்டும. இப்படிச் செய்தால் இக்காட்டிலும் தாய் நாட்டிலும் அன்பு இரக்கம் சமயவொழுக்கம் முதலியன பரவும் எனக் குறிப்பிட்டுச் சொற்பொழிவை முடித்தார். மறுநாட் காலை 8½ மணியளவில் ஆலயத்தில் சுமார் நாற்பது பேருக்குச் சமய தீட்சை கொடுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரோடை உப தபால் நிலையம் ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை

### அத்தியார விழா

கந்தரோடை சைவ இளைஞர் சங்கம், சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், சைவ வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்பவைகளின் ஆதரவில் 14-3-53 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இளைப்பாறிய மாகாண வைத்திய அதிகாரி Dr. சுப்பிரமணியம் அவர்களும் தபால் மந்திரி கௌரவ சு. நடேசன் அவர்களும் ஊர்வலமாய் அழைக்கப்பட்டு ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை உபதபாற்கந்தோர் ஆகியவற்றுக்கு அத்திபாரமிட்டனர். பின் சைவ வித்தியாசாலையில் பெற்றோர் தின விழா ஸ்ரீமான் சு. நடேசன் அவர்களது தலைமையில் ஆரம்பமாயது. முதலாவதாக Dr. S. சுப்பிரமணியம் அவர்களால் ஸ்ரீமான். சு நடேசன் அவர்களுக்கு ஓர் வரவேற்புப்பத்திரம் வழங்கப்பெற்றது.

வலி-வட காரியாதிகாரி திரு. T. பாலச்சந்திரன், வடபகுதி வித்தியாதரிசி திரு. S. சரவணமுத்து, வித்துவான் திரு. S ஆறுமுகம், ஆசிரியர் திரு. க. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். பாடசாலை மாணவர்களால் கதம்பக் கச்சேரி நிகழ்த்தப்பெற்று 10 மணியளவில் விழா நிறைவெல்தியது.

### தையல்நாயகி தோத்திரமாலை

இது வண்ணைத் தையல்நாயகி பேரில் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளையால் பாடப்பெற்ற ஒரு தோத்திரமாகும். சென்ற தை மாதம் 12உ நிகழ்ந்த புனராவர்த்தனசம்புரோக்ஷண கும்பாபிஷேக ஞாபக இலவச வெளியீடாக தேவகோட்டை ஸ்ரீ பழ. சோம. கைலாசநாதன் செட்டியார் அவர்கள் அச்சிட்டு வெளியிட்டனர். பிரதிகள் பெற விரும்புவோர் ஸ்ரீ சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

### வடமாகாண ஆசிரிய சங்கம்

சனிக்கிழமை 7-3-53 பிற்பகல் 3-30 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கெதிரில் வடமாகாண ஆசிரியசங்க அலுவலகம் சங்கத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. ஆசிரிய சங்கங்களுக்குள்ளே அலுவலகமொன்றை அமைக்கும் பேறுபெற்றது இதுவொன்றுமே என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

### வேண்டுவார் வேண்டுவது யாது?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே "வேண்டத்தக்க தறிவோய் நீயே" என்னும் நாயனார் கூற்றிற்கிணங்க தலைவராகிய சிவபெருமான் திருமுன்னிலையில் தன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து "யான் ஒன்றும் அறியேன் எல்லாம் நின்செயல் அடியேனை இப்பிறவிப் பெருங் கடலினின்று ஈடேற்றல் தேவரீருடைய கடன்" என வேண்டுதலேயன்றி ஆன்ம ஈடேற்றத்துக்கு வேறு வழியில்லை என்பதுவே, அப்பர் சுவாமிகளின் அவ்வடியின் பொருள். தன்னை வேண்டுதல் செய்யும் அடியார்களுக்குத் துன்பம் நீங்கவும் இன்பம் பெருகவும் எது வேண்டியதோ அதையே கொடுப்பவனை கண்டாய் என்பதன்றி, அவர்கள் விரும்புவன எல்லாவற்றையும் கொடுப்பான் என்பது பொருள் அன்று என்பதுவே, வேண்டியதே என்பதில் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்ததென்பதும் உய்த்துணரப்படவும், அவ்வாறுணர்ந்து ஒழுகி நாமும் இறை பேரின்பத்தை யடையவும் திருவருளை வேண்டுவோமாக.

### திருக்கருப்பறியலூரில் மகா கும்பாபிடேகம்

தலைஞாயிறு என வழங்கும் திருக்கருப்பறியலூர் ஸ்ரீ கோல்வளைநாயகிசமேத ஸ்ரீகுற்றம் பொறுத்தீஸ்வரசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம் நிகழும் பங்குனி 9உ (22-3-53) நடைபெறுமென்றும், ஆரம்பக் கிரியைகள் பங்குனி மீ 7உ (20-3-53) தொடங்குமென்றும் அறியவருகின்றது.

### ∴ வீர மங்கையர் ∴

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நோ ஏற்படுமோ அதே போன்று அந்த நேரம் உன்னாலே பொறுக்க முடியாத பெரிய நோ ஏற்படும். இப்படி உனக்குக் கால் வந்தபின் உன்னைப் பார்க்கும் எவரும் இவளைப்போல அழகிய பெண்ணை யாம் இதுவரையும் கண்டதில்லை என்று எண்ணுவர். உனக்கு இருப்பது போன்ற அழகியநடை வேறெவருக்கும் இருக்காது. நடனமாதரும் அதனைக் கண்டு ஆசைப்படுவர். ஆனால் நீ அடிவைத்துத் தரையில் நடக்கும் போதெல்லாம் கூரிய வாளின் மேலே நடக்கும்போது ஏற்படும் வருத்தம் உனக்கு உண்டாகும் இப்படியான துன்பம் உன்னாற் பொறுக்க முடியுமா? அப்படியானால் சொல்லு. குடிநீரைத் தருகிறேன்."

அப்போது நீரமகள் அரசிளங்குமரனையும் அழிவில்லா உயிரையும் எண்ணினள். நெடிதாலோசித்துவிட்டு தடதடத்த குரலோடு "அவ்வருத்தத்தை யான் பொறுத்துக் கொள்ளுவேன். நீ செல்லும் வண்ணம் செய்ய யான் சம்மதிக்கிறன்" என்று நடுநடுங்கிக் கூறினள். பின்னும் ஒருமுறை சூனியக்காரி அவளுக்குக் கூறுவள். "கவனம் நல்லாய் விளங்கிக்கொள். ஒருமுறை நீ மனிதஉருவம் எடுத்தால் நீரமகளிர் உருவத்தைப் பின்பு திருப்பிப் பெறலாம் என்று நினைக்காதே. கடலில் இறங்கி நீந்திச்சென்று உன் சகோதரரிடம் போகவும் முடியாது. உனது தந்தையின் மாளிகையைப் பார்க்கவும்முடியாது. அது மட்டுமன்று அவ்வரசிளங்குமரனுடைய காதலையும் நீ பெறவேண்டும். அப்போது உன்பொருட்டு அவன் தனது தாய் தந்தையரையும் மறந்து உன்னைக் காதலிக்க வேண்டும், அதன் பின் ஓர் அந்தணன் உம்மிருவரையும் மணமுடித்து வைக்கவேண்டும், இவ்வாறு மணமகளும் மணமகனுமாக நீவிர் இருவரும் ஒன்றுசேர்ந்து வாழ்வீர்; பின் நீ அழிவில்லா உயிரைப் பெறுவாய். அவ்வாறன்றி அவன் வேறொருத்தியை மணப்பானாயின், அவன் மணமுடித்த மறுநாட் காலையிலேயே உன்உடல் இருகூறாய்ப் பிளந்து கடல் நுரையாக மாறிவிடும்".

இறந்தவர் முகம் போலச் சிறுமியின் முகம் அச்சத்தினால் வெளிறியது. எனினும் "யான் அதற்குச் சம்மதிக்கிறேன்" என்று விடைபகர்ந்தாள்.

அப்போது சூனியக்காரி மறுபடியும் கூறுகிறாள். "யான் உனக்குச் செய்யும் இந்த உதவிக்குப் பதிலாக நீ எனக்கு ஒரு பொருள் கொடுத்தல் வேண்டும். அப் பொருளோ விலைமதித்தற்கரியது. கடலின் கீழ் உள்ளவர் எவரிடத்தும் இல்லாத இனிய ஓசை உன்னிடத்து உண்டு. அவ்வினிய ஓசையினால் அரசிளங் குமரனை நீ இலகுவில் மயக்கி விடுவாய். அதனை எனக்குத் தந்துவிடு. யான் உனக்குத் தரும் குடிநீர் கண்டு பலிப்பதற்காக என்னுடைய இரத்தத்தை அதற்குள் விட்டு நல்லாய்க் காய்ச்சுதல் வேண்டும். உனக்காக என் இரத்தத்தையும் இழக்கவிட நேரிடுகின்றது. ஆதலால் அரிய பொருளாயிருக்கும் உன் ஓசையை எனக்குத் தந்துவிடு".

"இதற்கு நீரமகள் "என் ஓசையை நீ எடுத்தால், பின்னர் என்னிடத்து மிஞ்சியிருப்பது என்ன" என்று கேட்டாள். ..........(வளரும்)

### திருப்பதிகம் பெற்ற திருத்திலதைப்பதி

இத்தலம் காவிரித் தென்பால் ஐம்பத்தெட்டாவது திருத்தலம். மதிமுத்தம், மந்தாரவனம், ஹரிக்ஷேத்ரம், பிரமபுரயகம், திலதருப்பணபுரி ஆய திருநாமங்களோடு திகழ்வது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பெற்ற சிறப்பினது. பிரமன், அம்பிகை, திருமால், நற்சோதிகன், இராமர், இலக்குமணர், சூரியன், சந்திரன் முதலாயினோர் வழிபட்டுப் பேறுபெற்ற சிறப்புடையது.

#### பிரமன் வழிபாடு

இவர் முற்கலன் அத்திரி வசிட்டர் பர்க்கன் சுகர் திருமால் முதலிய தேவர்களுடன், திருக்கைலைத் திருமலையின்கண் உமாசமேதன் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றனர். நந்தியம்பெருமான் விடைதர உட்சென்றனர். பெருமானைத் தரிசித்து நின்றனர். அரம்பை, ஊர்வசி முதலியோர் ஆடல்புரிந்தனர், இறை திருமுன் ஆடல்புரிந்திடும் ஊர்வசியார்பால் மோகமுற்றுச் சாபமுற்றனர். இங்குவந்து தீர்த்தங்கண்டு சரஸ்வதியாரோடும் நீராடி வழிபட்டுச் சாபவிமோசனம் பெற்று அருளுற்றார்.

#### இலக்குமி வழிபாடு

இவர் திருமால் சமேதராகி வைகுந்தத்துப் பாம்பணைத் தேமலரமளியிசை வீற்றிருந்தனர். இத்தலத்துறையும் பூவுலகவாசிகளாய வாலகில்லியர்கள் யாகம் செய்யக் கருதி ஆங்கு சென்று திருமகள் மணாளனைக்கண்டு பணிந்தனர். யாகங்கள் புரியும் வேள்வியினைக் காத்து அருள்புரிதல் வேண்டுமென விண்ணப்பித்தனர். பக்கலில் நின்ற திருமகளார் இவர்களது வடிவங்கண்டு பரிகசித்தனர். அதனால் அவர்கள்பால் நீவிர் வைகுந்தவாசினியாயிருத்தற்குத் தக்காய் அல்லை எனச் சாபமுற்றனர். பின்னர், தம் மணாளரது குறிப்பின்வழி வாலகில்லியர்கள் அருளிய வண்ணம் சாபவிமோசனம் பெறுவான் கருதினர். திருமாலின் ஆணைவழி அவ் வாலகில்லியர்கள் ஸ்ரீ வைகுந்தத்தைக் காவல்புரிந்தனர். வாலகில்லியர்கள் அருளிய முறைவழி தமது மணாளரோடு ஈங்கு வந்து வழிபட்டனர். பெருமான் தோன்றி அருள்புரியவே சாபம் நீங்கினர். பின் ஈங்கேயே தென்பால் சிறு ஆலயம் அமைத்து, மேல்பால் தீர்த்தங் கண்டு நீராடி இறைவழிபாடு புரிந்து தமது மணாளரோடு வைகுந்தம் சார்ந்தனர், இவ்விலிங்கம் மாதவலிங்கம் என வழங்கப்பெறுகிறது.

#### அம்பிகை வழிபாடு

இவர் சிவபிரானை யெண்ணாது செய்த தக்கனது வேள்வியை எண்ணித் தம் பெருமானார் சொல் எண்ணாது சென்றமையபற்றிப்பெருமான் அருள்வழி வந்து இங்கு மந்தார நிழலில் அமர்ந்து எண்ணில்லாத பலகாலம் தியானயோகமுற்றனர். இங்கு இறைபருள் குறிப்பின்வழித் தோன்றிய இலிங்கவுருவினைச் சித்தசுத்தியுடன் அன்புகொண்டு பூசித்து வழிபட்டுத் தக்கன் மகளாரா என்ற திருநாமம் மாறிட வாமபாகத்துற்று மகிழ்ந்தனர்.

## உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 22—3—53——28—3—53

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

அமைதியில்லா வாரம். தேகசுகம் பிழைக்கக்கூடும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாள வேண்டும். குடும்பத் தொந்தரவுகளுக்கு யிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

பணத்துறையிற் கடினமான காலம். ஆறுதலிராது. பிள்ளைகளுக்குச் சுகவீனத்துக்கிடமுண்டு. வார இறுதியில் இனத்தவர் சில குடும்ப தடுமாற்றங்களுக்குக் காரணராயிருக்கக்கூடும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

நல்ல வாரம். அதிக இலாபம் பெறக்கூடும். நண்பரிடமிருந்து சில காத்திராத உதவிக்கிடமுண்டு வார இறுதிக்கு முன் ஒரு தூர இடத்திலிருந்து சில நல்ல புதினங்கள் அறியவரும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

மனச்சமாதானமிராது. சித்திபெற அதிகம் முயல வேண்டும். கவனமாயிராவிட்டால் பழிமொழிக்காளாக்கப்படக்கூடும். நண்பரை அதிகம் நம்பியிருக்க வேண்டாம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

சிறு உத்தியோகத் தொந்தரவுக் கிடமுண்டு. நண்பருடன் பிழை எண்ணத்துக்கு யிடமுண்டு. தொடக்க இடைஞ்சல்களின் பின் உமமுடைய காரியங்களில் சித்திபெறுவீர். வார இறுதியில் இராசியப் பகைவரைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

தடுமாற்றமான வாரம். ஆபத்துக்களுக்கிடமுண்டு. உம்முடைய எல்லாக் காரியங்களிலும் கவனமாயிருக்கவும். சண்டைகளுக் கிடமுண்டு. வாரம் முழுதும மனச்சமாதானமிராது.

**துலாம் சித்திரை 3,4ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்த வாரம் குடும்பத்தாருட் பிழை எண்ணத்துக் கிடமுண்டு. செலவதிகரிக்கும். ஆனால் வேண்டிய பணம வரும. வார இறுதியில் அவமானம் ஆக்குவோரைப் பற்றிக் கவனமாயிருக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம அனுஷம், கேட்டை.**

வாரத்தின முதல் மூன்று நாட்களுள் உம்முடைய புது நண்பர் சில இடைஞ்சல்களுக்குள் உம்மை விடக்கூடும். உத்தியோகத் தொந்தரவுக்குமிடமுண்டு உம்முடைய எல்லாக் காரியங்களிலும் அதிக எதிர்ப்புகளும் கண்டனங்களுமிருக்கும். ஆனால் வெற்றி பெறுவீர்.

**தனுராசி மூலம்பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

முதல் இரு நாட்களும் புது முயற்சிகளுக்கு நலலகாலம். ஆனால் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கவேண்டும். தேக சுகம் சிக்கலாயிருக்கும். வார இறுதி திரும்பவும் நல்லதாகின்றது.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் மாதாவழி இனத்தவர் சில தொந்தரவுண்டாக்கக்கூடும், அல்லது தாயாருடைய தேகசுகம் பழுதாகக்கூடும். கடைசி இரு நாட்களும் பொறுமையை அதிகம் பாதிக்கும். எல்லாக் காரியங்களிலும் கவனமாயிருக்கவும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் நண்பர் அதிக உதவி செய்வர். சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கிடமுண்டு ஆனால் பிழையின்றி வெளிவருவீர் வாரஇறுதியில் தனலாபம் நிச்சயம.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இந்தவாரம் மனைவியின் இனத்தவர் அதிக உதவியாயிருப்பர். தனலாபம் நிச்சயம். உம்முடைய சில காரியங்களில் சில எதிர்ப்பிருக்கும். ஆனால் வார இறுதியில் நீர் வெற்றி பெறுவீர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபை
## யாழ்ப்பாணம்

மேற்படி சபையினது ஒரு விசேஷ பொதுக் கூட்டம் நிகழும் பங்குனி மீ 9-ந் உ (22-3-53) ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்கு நீராவியடியிலுள்ள சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

### விஷயம்

1. விபூதி தரித்தல் — தேவாரம்
2. சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3. பிரேரணைகள்:

(அ) "சபை பிரசுரிக்கும் இந்துசாதன தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் நேரும் பண நஷ்டத்தைக் குறைப்பதற்காக, இவற்றை 1—4—53 தொடக்கம் 6 பக்கம் கொண்ட சிறந்த வாரப் பத்திரிகைகளாகப் பிரசுரிக்க வேண்டுமெனவும், ஆங்கிலப் பத்திரிகையை "The Ceylon Hindu" என்ற பெயரோடு பிரசுரிக்கவேண்டுமெனவும், இப்பொதுக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

(ஆ) "வருங்காலத்தில் இலங்கை மாணவருக்கு என்ன மொழியில் எப்படிக் கல்வியூட்ட வேண்டுமெனச் சபைஆலோசித்துச் சபையின் அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டும்.

(இ) இச்சபையின் பிரதிநிதிகள் உள்நாட்டு மந்திரியையும், தமிழ் மந்திரிகளையும் சந்தித்து அறநிலையப் பொருட் பாதுகாப்புச் சட்டத்தை விரைவில் அநுசரணைக்குக் கொண்டுவரும்படி கேட்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது"

4. வேறு விஷயம் 5 தேவாரம்.

யாழ்ப்பாணம்
11—3—53.

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி

குறிப்பு ☞ அங்கத்தவர் (1) தமது சந்தாவையும், (2) சபை ஆச்சிரம நாவலர் மண்டபக் கடன் நிவாரண நிதிக்குச் சேர்ந்த பணத்தையும் பணம் சேர்க்கத் தாம் பெற்ற காகிதத்தையும் கூட்டத்திற்கு முன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.


# திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணி ஆரம்பம்

நிகழும் நந்தன ஹூ பங்குனிமீ கஉ-ந் தேதி (25-3-53) புதன்கிழமை பூச நட்சத்திர சுப தினத்தில் வவுனியாவிலுள்ள மலையிலே கருங்கல் அகழ்ந்து அதனைக் கொண்டு அடுத்த நாள் (26-3-53 வியாழக்கிழமை அதிகாலை 1 மணிக்கு மேல் நிகழும் சுபவேளையில் மேற்படி ஆலயத்தில் திருநிவிநாயகர் கோயிலுக்கு அத்திபாரமிட்டுத் திருப்பணி ஆரம்பிப்பதென மேற்படி புனருத்தாரண சபைத் தலைவராகிய ஸேர் கந்தையா வைத்தியநாதனவர்கள் தெரிவித்துள்ளாரென்றும், புதன்கிழமை இரவு வண்ணை பிரம்மஸ்ரீ C. S. S. மணிஐயரவர்கள் "பக்த கௌரி" சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதம் கதாப்பிரசங்கம் செய்வாரென்றும், மேற்படி திருப்பணிச் சபை அங்கத்தவருளொருவராகிய ஸ்ரீ சித. மு. பசிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தெரிவிக்கின்றார்.

# இன்பந் தரும் பொருள் எது?

1-ம் பக்கத் தொடர்ச்சி

துக்கேற்பத் தமது என்ற சொல்லுக்குத் "தந்தாளான் (முயற்சியால்) வந்த பொருள்" என்று உரை கூறிச் செல்கின்றார்.

## தமக்குரிய பொருள்

"தம் முயற்சியால் வந்த பொருளே தமக்குரியது. பிறர் முயற்சியால் வந்த பொருள், தமக்குரியதல்ல" என்று கருத்துக்கொண்டே, பொதுவாகச் செல்வத்தை என்று கூறாது, தம் முயற்சியால் வந்த பொருளை ஈட்டினோர்க் குரிமையாக்கி, 'தமது' என்று கூறினார் போலும், உலகம் போற்றும் ஒண்டமிழ் மறையார்!

இனி நம் அகக்கண்ணைக் கி. பி. 2-ம நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குத் திருப்புவோம். அக்காலங்களில், தான் தன் முயற்சியால் வந்த பொருளையே பயன்படுத்துவாராயினர், ஒவ்வொருவரும். தலைவியை மணந்துகொள்ள விரும்பும் தலைவனும், தான் முயன்று தேடிய பொருளைக் கொண்டே அவளை மணந்து கொண்டான், இக் கருத்தினாலேயே, "வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு" என்ற செய்தி நம் அகப்பொருள் நூல்களிற் காணப்படுகின்றது. தலைவன் தலைவியை மணந்துகொண்ட பிறகும் தன் பொருளைக் கொண்டே இல்லறம் நடாத்துவனென்பது, கற்புக் காலத்திற்குரிய பிரிவுகளிற் 'பொருள் வயிற்பிரிவு' என்று ஒரு பிரிவு காணப்படுதலின் அறியலாகும்.

ஒரு முறை, தலைவன் தலைவியை விட்டுப் பொருள் ஈட்டவேண்டிப் பிரிந்து சென்றான். அவன் பிரிந்ததனால் உண்டான துன்பத்தைத் தலைவி பொறுக்கமாட்டாள் என்று தோழி வருந்துகிறாள். தோழி வருத்தத்தை உணர்ந்த தலைவி "அவர் பிரிந்ததற்காக நான் வருந்தவில்லை. அவர் சென்ற வழியின் [illegible]

லேன்" எனக் கூறுவாளாய் அவன் பிரிந்து சென்றதற்குக் காரணமும் வழியின் கடினமும், சொல்லுகிறாள்:—

## இரந்துண்பதிலும் இழிந்த வாழ்க்கை

"தம் முன்னோர் தேடிவைத்த பொருளை அழிப்பவர், இவ்வுலகத்தில் இருப்பதாகக் கருதப்படமாட்டார். (தம் முயற்சியால் ஈட்டிய) பொருள் இல்லாதவர் வாழ்க்கை, இரந்துண்ணும் வாழ்க்கையைக் காட்டிலும் இழிவைத் தருவது என்று பெரியோர் கூறிய ஆண்மை நிறைந்த சொல்லை மனத்துட்கொண்டு, —நயனை ஒத்த கொலைத் தொழிலமைந்த வேலேந்திய வீரர்கள் வழியிற் றங்கி, வழிச் செல்வாரைக் கொன்று வீசும் புலாலைப் பருந்து (தான் உண்ணவேண்டி) பார்த்துக் கொண்டு இருக்கும் நீண்ட வழியிடத்துச் சென்ற தலைவர் வாழி" என்று கூறுகிறாள்.

இங்ஙனம் உயர்ந்த நீதியமைந்த இக்கருத்தைத் தலைமகள் கூற்றாக வைத்துச் செய்யுள் செய்த புலவர், "பாலை பாடிய பெருங் கடுங்கோ" என்பாராவார். அந்த இனிய பாட்டைக் கீழே தருகிறேன். நோக்கி மின்புறுங்கள்.

"உள்ளது சிதைப்போர்
உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை
யிரவினும் இளிவெனச்
சொல்லிய வன்மை
தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி
தோழி யென்றும்
கூற்றத் தன்ன
கொலைவேல் மறவர்
ஆற்றிருந் (து) அல்கி
வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த்
திருக்கும்
நெடுஞ் சூழ திடைய நீரி லாறே.
(குறுந்தொகை — உஅங பாலை)

இப்பாட்டில், தம் முன்னோர் பொருளை அழிப்போர் இருப்பதாகக் கருதமாட்டார் என்றது, "அவர் பொருள் தேடவேண்டிப் பல மக்களிடைப் பயிலமையால் அவரையறிந்த யாவரும் இரார். யாராலும் அறியப்படாதுபோகவே அவர் இங்கில்லாதவராகவே கருதப்படுவார்," என்பது கருதி, இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு தருவதென்று, "இரவலர் பிறர் பொருளைத் தம் இன்முகங்காட்டி வேண்டிக் கொடுப்பார்க்குப் புகழ்ச்சி மொழிகளைக் கூறிப் பெறுகின்றனர். ஆனால் இவர்களோ, ஈட்டினோர்க்கு எவ்வகை வழிபாடும் செய்யாது, அதிகாரத்துடன் பொருளைப் பெறுகின்றனர். பொருளை ஈட்டினோர் உடன்பாடின்றி அவர்கள் இறந்துவிட்டிருப்பின், அவர்களை அறியாமற் களவு முறையிற் கொள்கின்றனர்" என்பது கருதி, வழியின் அருமை கூறியது, "தம் பொருளைக்கொண்டே, வாழ்க்கை செலுத்தவேண்டும் என்ற ஆன்றோர் மொழி தன் மனத்தில் நிலைபெற்று நிற்றலின், செல்லுதற்கரிய கொடிய வழியிலும் தலைவன் பொருள் தேடச் சென்றான்" என்ற கருத்துத் தோன்றுதல் வேண்டி.

இதுகாறும் கூறியவாற்றால், இக்காலத்து ஒருவன் ஈட்டி வைத்த பெரும் பொருளைப் பலரும் வீண் வழிகளிற் செலவு செய்கின்றனர் என்பதும், தம் முயற்சியாற் பொருள் தேடாத காரணத்தால் அவர்கட்குப் பொருளின் அருமை தெரியவில்லை என்பதும், முன்னோர் ஈட்டி வைத்த பொருளைப் பின்வந்தோர் அறநெறிகளிற் செலவிடுதல் வேண்டும் என்பதும் தான் ஈட்டிய பொருளால் வாழ்வான் இன்பம் அடைவான் என்பதும், பிறர் பொருள் கொண்டே வாழ்க்கை நடாத்துவதில் மிக்க விருப்புடையவர் என்பதும் பெறப்பட்டன. இவற்றையெல்லாம் உட்கொண்டு ஒவ்வொருவரும் தம் முயற்சியாற் பொருள் ஈட்டி வாழ்க்கை நடாத்தி இன்பந்துய்ப்பாராக.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**
எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியசேர்ட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.



சூதக வயிற்றுவலி சொல்லாமலே மறையும்.
# கர்ப்ப எண்ணெய்
:: உபயோகியுங்கள் ::

மாத விலக்குக் காலங்களில் உண்டாகிற சூதகக்கட்டு, இடுப்புவலி, துத்தோடுகூடிய சூதகம், கை கால் குடைச்சல், மயக்கம், கர்ப்பச்சிதைவு, அகாலப் பிரசவம் முதலியவைகளைக் குணப்படுத்தி மாத விலக்கைக் கிரமப்படி வெளியேற்றிக் கர்ப்பமுண்டாக்குகிறது.

● புட்டி ஒன்றுக்கு விலை ரு 3-0-0 ●

ஏஜண்டு:- S. பொன்னுச்சாமிபிள்ளை,
133, தம்பகொடா தெரு, பலாங்கொடை. (ŧ)
தலைமைஆபீஸ் மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Shiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday! March 20 1953.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org